OS.No.110/2019
PW1 – இராதாகிருஷ்ணன்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. எனக்கு பாத்தியமான சொத்தை 1984 ல் கிரையம் வாங்கினேன். நானும் என்னுடைய அண்ணனும் சேர்த்து கிரையம் வாங்கினோம். 1984 கிரையப்பத்திரம் கிரையம் வாங்கியபோது முந்தைய பத்திரத்தை பார்த்தேனா என்றால் இல்லை. சர்வே எண் 412/5 ல் தான் நான் கிரையம் வாங்கினேன்.

2. நான் கிரையம் வாங்கிய சொத்திற்கு தாய் பத்திரம் இல்லை. எனக்கு இடத்தை விற்பனை செய்தவரின் 4 பங்காளிகள் தான் தாய் பத்திரத்தை காண்பித்து கிரையம் கொடுத்தார்கள். தாய் பத்திரத்தின் அசல், அல்லது நகல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாய் பத்திரத்தின் அசலோ, நகலோ தாக்கல் செய்திருந்தால் நான் வாங்கிய சொத்தின் உண்மை நிலை தெரியவந்துவிடும் என்பதால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

3. பொதுவாக சொத்துக்கள் சம்மந்தமாக கிரையம் கொடுப்பது வாங்குவது பற்றி எனக்கு தெரியும். நான் கிரையம் வாங்கிய சொத்திற்கு கீழ்புறத்தில் பிரதிவாதி சொத்து உள்ளது என்றால் சரிதான். அதறகு வடக்கே எனக்கு கிரையம் கொடுதத பங்காளிகள் சொத்து அடுத்தடுத்து உள்ளது. சர்வே எண் 412/5 ல் சொத்திற்கு நடுவர் பாதை இல்லை என்றால் சரியல்ல. பாதை உள்ளது.

4. என் சொத்திற்கும் கோவிலுக்கும் இடையில் பாதை இருக்கிறது என்பதை காட்டக்கூடிய புலப்படம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய சொத்திற்கு மேற்கு பக்கம் பாதை இல்லை என்றால் சரியல்ல உள்ளது. என் சொத்திற்கு மேற்குபக்கம் பாதை உள்ளது என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரியல்ல.

5. நானும் எனது தம்பியும் கிரையம் வாங்கிய தேதி முதல் இந்த சொத்தை அனுபவத்தில் இருப்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நானும் பிரதிவாதியும் ஆரம்பத்தில் நெருக்கமாக தான் இருந்தோம் என்றால் சரிதான். பிரதிவாதி அவர்களுடைய சொத்தை சுற்றிலும் ஆரம்பத்தில் கம்பி வேலி அடைந்திருத்தார்கள் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள புகைப்படத்தில் கல் ஊன்றியுள்ளது என்றால் சரிதான். அந்த புகைப்படம் பி.வா.சா.ஆ.1 ஆகும். அந்த கல்லை நான் ஊண்றவில்லை.

6. அநத் கல்லை யார் ஊன்றினார்கள் என்று எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.1ல் ஏற்கனவே பிரதிவாதி கம்பி வேலி அடைத்திருந்தார் என்றாலும், நான் இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. கம்பி வேலி இருந்த இடத்தில் பிரதிவாதி காம்பவுண்ட் சுவர் கட்டினார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதி கட்டிய காம்பவுண்ட் சுவர் தெற்கு வடக்காக உள்ளது என்றால் சரிதான்.

7. எங்களை போலவே எங்களுக்கு வடக்கே உள்ளவர்கள் பிரரிவாதிகளின் காம்பவுண்ட் சுவற்றுக்கு ஆட்சேபனை செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் வந்து அளந்த போது எங்களுக்கு வடக்கே உள்ளவர்கள் ஒத்துழைப்பு கொடுத்தார்கள் என்றால் சரியல்ல அவர்கள் ஊரில் இல்லை.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)**